தமிழ் இலக்கியங்களில் இயற்கையும் சுற்றுச்சூழலும்

முனைவர் சௌ. மெர்ஸி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.
DOI: https://doi.org/10.5281/zenodo.19220442

முன்னுரை

இயற்கை என்பது ஒரு முழுமையான நிரந்தர இயல்பாகும். மனிதன் இயற்கையைச்சார்ந்து உயிர் வாழ்கின்றான். அவன் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்து எடுத்துக் கொள்கின்றான். இயற்கை மனிதனின் அங்கம். இயற்கையின் கோலம் காண்போர் கண்ணிலும், மனதிலும் நிலைத்து பழந்தமிழ் இலக்கியங்களில் பரந்துக் காணக் கிடக்கின்றன. மனிதன் தான் வாழும் இருப்பிடத்தையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாகப் பேணுகின்ற போது ஆரோக்கியமான உலகிற்கு வழிகோலுகின்றான். செவ்வியல் இலக்கியங்களாகத் திகழும்சங்கநூல்கள்மக்களின்வாழ்வியலைத்தன்னகத்தேஅடக்கியுள்ளன.சங்ககாலமக்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்ததோடு நில்லாமல் பேணும் முறையையும் உலகிற்குக் கற்றுக் கொடுத்துள்ளனர். இன்றைய சூழலில் தொழில் நுட்பத்தில் வளர்ச்சி காரணமாக உலகம் முழுவதும் மாசுபட்டுள்ளது. அம்மாசு வரும் தலைமுறையினருக்கு பெருந்தீங்கை ஏற்படுத்தும் என்ற விழிப்பு நிலையை உணர்த்துவது அவசியமாகிறது. அவ்வகையில் இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் கடமையாகும். அதற்கு நம் பழந்தமிழ் இலக்கியங்கள் இயற்கையை எவ்வாறு போற்றிப் பாடியுள்ளது என்பதையும் நாம் அறிந்துக் கொள்வது அவசியமாகிறது. அவ்வகையில்தமிழ் இலக்கியங்களில்மக்கள்வாழ்ந்த இயற்கைச் சூழலை இனம் காண்பதே இக்கட்டுரையாகும்.

சுற்றுச் சூழலியல்: விளக்கம்

மனித வாழ்வு பிறரையும், பிற பொருள்களையும் சூழ்ந்த வாழ்வாக அமைந்துள்ளது என்பது உண்மை. அந்தச் சூழலை இரண்டு பெரும் பிரிவாகப் பகுக்கலாம். 1) குடும்பச் சூழல், சமூகச் சூழல், நாட்டுச் சூழல், வரலாற்றுச் சூழல், அரசியல் பண்பாட்டுச் சூழல் என்றவைகளும் மனித வாழ்வை பாதிக்கும். 2) இயற்கைச் சூழல், கடல், மலை, காடு ஆகியவை சிலருக்கு நேரடியாக அதாவது விருப்பக் கூறுகளாக அமைய, நிலம், நீர் ஆகிய இரண்டு எல்லோருக்கும் உரிய அடிப்படைக் கூறுகளாக அமையும். மேலும் நிலத்தொடு தொடர்புடையது மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலியனவும் அடிப்படைக் கூறுகளே. அவை எப்படியெல்லாம் மனித வாழ்வுக்கு உதவுகின்றன. மனித வாழ்வைப் பாதிக்கின்றன என்ற புதிய ஆய்வுத்துறையே சுற்றுச்சூழலில் (Ecology) *என்று அழைக்கப்படுகிறது.*

தமிழ் இலக்கியங்களில் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல்

உலகமானது நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் புதங்களும் கலந்தது என்பது பண்டைத்தமிழரின்இயற்கைபற்றியபுரிதல். விசும்பு என்பது வெற்றிடம் என்று கருதப் பட்டது. மலையில் பொழிந்த மழை நீர், காட்டில் அருவியாகச் சமவெளியில் ஆறாகப் பரந்து பாய்ந்து, கடலில் கலக்கிற இயற்கைச் செயல்பாடு தான் நிலப்பாகுபாட்டிற்கான ஆதாரம். மலை, காடு, வயல், கடலோரம் என்ற நான்கு வகையான நிலங்களே உலகம்

எனக் கண்டறிந்த சங்கத் தமிழர் நானிலம் என வகைப்படுத்தினர். திணைக் கோட்பாடு உருவாகுவதற்கு நான்கு வகையான நிலங்களே உலகம் எனக் கண்டறிந்த சங்கத் தமிழர் நானிலம்என வகைப்படுத்தினர். (Ecosystem) இன்றளவும் முக்கியமானவை. காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவது நிலங்களை உள்ளடக்கிய சூழல் தொகுப்புகள் தான். நான்கு திணை நிலங்களும், அந்நிலத்தில் சிறந்து விளங்கிய பூக்களின் பெயர்களால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அழைக்கப்பட்டன. சூழல்சிதைவடையும்போது உருவானநிலம் பாலை என்று குறிப்பிடப்பட்டது. நிலத்தின் அடிப்படையில் ஐந்து வகையான சூழல் தொகுதிகளை உருவாக்கியதுடன் குறிப்பிட்ட நிலத்திற்கென முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை வரையறை செய்தது. பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) சார்ந்தது. உயிரின வளத்தின் (Bio-diversity) சிறப்புகளாக அறிவியலாளர் குறிப்பிடுகிற அம்சங்கள், சமகாலத் தமிழகத்தில் நிலவியுள்ளதைத் தொல்காப்பியம் மூலம் அறியமுடிகிறது.

நீர்நிலைப் பற்றிய சூழலியல்

மனிதன் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலும் மனிதனுக்கும், சுற்றுச்சூழலுக்குமான உறவில் நேரடித்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சூழலோடு இயைந்து இயங்கும் வாழ்வே நிம்மதியும், வளத்தையும் தரும். எதிர் திசையில் மனிதன் பயணிக்கும் போது இயற்கையின் சீற்றங்களுக்கு அவன் ஆளாக நேரிடுகிறது. இயற்கையைப் புறந்தள்ளும் பொழுது இயற்கை அவனைப்புறந்தள்ளுகிறது. உயிர்ப் பொருட்களின் வாழ்வியக்கத்திற்குத் தேவையான நீர், நிலம், காற்று போன்ற பொருள்கள் மாசடையாமல் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வே சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வு. உலகின் உயிர் மூலங்களான நீர், நிலம், காற்றின் பாதுகாப்புச் சுட்டப் படுகிறது. இம்மூன்றின் தன்மைகளே உலகச் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்றன. அதே போல் நீர் நிலையைப் பற்றிக் குறிப்பிடும் புதுக்கவிதை ஒன்று. ஒரு ஏரியைப்பின்வருமாறுகாட்டுகிறது. விருந்தாளிகள் நிறைந்த வீடு போல தாத்தா காலத்தில் ஏரியாக இருந்தது. அதனைச் சுற்றி நாரைகள், கொக்குகள் இருந்தன. மரங்கள் புத்து மணம் பரப்பின. வண்ணத்துப்புச்சிகள் எங்கும் சுற்றித் திரிந்தன. நுரை பொங்கக் குதித்தோடும் நீரின் மதகுகள் இருந்தன. ஏரிகள் சிற்றலைகளை எழுப்பின. இத்தன்மைகளைக் கொண்ட ஏரி மனிதனின் முறையற்ற செயல்களால நினைவு தப்பிய பாதையோரப் பிச்சைக்காரனைப் போல உருமாறிப் போனதைப் பின்வரும் பாடல் வரிகள் காட்டுகிறது.

"சித்திரைக் காலத்தில்
ஒரு நண்பகலில்
சருகுகளை விலக்கியபடி கால்வாயில்
கழிவுநீர்
ஒரு பாம்பைப் போல் ஊர்ந்து வந்தது.
புதுவெள்ளம் என்றெண்ணி
எதிரோடிய மீன்களின்
செவுள்கள் ரணமாயின
மிதந்த மீன்களை
விழுங்கிய கொக்குகள்
பட்டுப்போன
மரக்கிளைகளில் இருந்து
மயங்கிச் சரிந்தன"

(கல்லால மரம், பக்.30-31)

புதுவெள்ளத்தில் நிரம்பிய நீர்நிலை, ஆம்பலும், தாமரையும் முகம் மலர்ந்த நீர்நிலை. இன்று மனிதர்களால் கொல்லப்படுதல் அதிர்ச்சி. "காப்புடையகயம்" *(புறம். 15:10)* கடிதுரை நீர் *(புறம். 16:6)* என்று பழந்தமிழர் நீர்நிலையினைப் பாதுகாத்தது இங்கு எண்ணத்தக்கது.

காடுகள் அழிப்பு பற்றிய சங்கப்பாடல்கள்

மனிதனுக்கும், பிற உயிரினங்களுக்கும் தீமை விளைவிக்கக்கூடிய நச்சுகள் சுற்றுச்சூழல்

மாசு எனப்படும். பாரியின் பறம்பு மலையை சிறப்பிக்க வந்த கபிலர்,

"குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின் அம்புகை அயலது
சாரல் வேங்கை புஞ்சினைத் தவழும்"
(புறம். 108 : 1-3)

என்று வரும் பாடலடிகளால் சந்தனமரம் எரிக்கப்பட்டமையும், அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றனர். அன்றாட தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கின்றோம்.

மற்றொரு புறப்பாடலில்"களிறே எழுவந் தாங்கிய கதவம் மலைந்து" (புறம் 97 : 8) என்ற வரியில் கோட்டைக்கு அமைந்த பெருங்கதவுகளின் வலிமையை உணர்த்தும் செய்தியினால் கதவுகள் செய்ய மரங்கள் அழிக்கப்பட்டது என்ற செய்தியை தெரிந்து கொள்ள முடிகிறது. இது போன்று தேர்கள், வண்டிகள், அச்சுகள் போன்ற பல பொருட்கள் செய்வதற்கும் மரங்களே பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. மக்களின் வாகனப் பயன்பாட்டிற்குத் தேர்கள் அதிகமாகப் பயன்பாட்டில் இருந்த குறிப்பினை,

"வைகல் எண்தேர் செய்யும் தச்சன்"
(புறம். 87:3)

என்னும் பாடலடி தருகிறது.

சங்க கால மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை

சங்க கால மக்கள் சுற்றுச்சூழலுக்கேற்ப தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். குறிஞ்சி நில மக்கள் மிகத் தாழ்வான சிறிய குடிசைகளை அமைத்தனர். தினைத்தாள்களையும், ஐவனநெல்கின் தாளையும் கூரையாக வேய்ந்த குடில்களில் வாழ்ந்தார்கள். முல்லை நில மக்களோ குடில்களின் மீது வரகுத்தாள், கேழ்வரகுத் தாள்களை கூரையின் மீது போட்டு குளிர வைத்தார்கள். அதற்கருகில் ஆடு - மாடுகளுக்கு இருப்பிட கொட்டகைகளை அமைத்தார்கள். இன்றளவும் சிறிய கிராமங்களில் இந்த வாழ்க்கைமுறையைக் காணலாம்.

"படுநீர்ப் புணரியன் பரந்தபாடி
பரந்த பாடி, குவலை கூரை ஒழுகிய
தெருவில்" **(முல்லை 28)**

பகை நாட்டினர் ஒரு நாட்டின் வளமையைக் கெடுக்க, பகையுணர்வு கொண்டு மருதநிலங்களையும், காடுகளையும் தீயிட்டு எரித்துள்ளனர். மேலும் பொருள் பயன்பாட்டிற்கும், போக்குவரத்துப் பாதை வேண்டியும் மரங்கள் அழைக்கப்பட்டதை சங்க இலக்கியம் பறைசாற்றுகின்றது.

"நிலம் தவ உருட்டிய நேமியோரும்
சமங் கண் கூடித்தாம் வேட்பவ்வே
.....
பேர் அமர் உழந்தவெரு வரு
பறந்தலை
விழு நவி பாய்ந்த மரத்தின்
வாள் மிசைக் கிடந்த ஆண்மையோன்
திறத்தே" **(புறம், 270-12)**

மேலும் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 96 வகையான புக்களைக் குறிப்பிட்டுள்ளார். எந்தப் பருவத்தில் எந்த மலர் புக்கும் என்பதையும் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். ஓரறிவு படைத்த தாவரம் முதல் ஐந்தறிவு படைத்த ஆவினங்கள் வரை தேவையை ஆய்ந்தறிந்து சுற்றுச்சூழலுக்கு எந்தவிதப் பாதிப்பும் வராமல் எழுத்தறிவு அதிகம் இல்லாத அந்தக் காலத்தில் செம்மாந்த வாழ்வு வாழ்ந்தனர்.

இக்கால இலக்கியத்தில் சூழலியல்

நவீன கண்டுபிடிப்புகள், மனித வாழ்வின் ஓட்டத்தை விரைவுப் படுத்தியதென்பது எந்த அளவிற்கு உண்மையோ, அதே அளவிற்கு இயற்கைக்கு எதிரான ஓட்டத்தையும் விரைவுப் படுத்தியதென்பதில் ஐயமில்லை. வேளாண்மைதுறையில் நவீன கண்டு பிடிப்புகளின் விளைவும் இதுவே. மின் இறைப்பான்கள் வந்த பிறகு நீரின் நிலத்தடி நீர்மட்டம் வெகு விரைவாக உள்வாங்கியதையும், வற்றியதையும் நிலம்

வறண்டு வேளாண் வளம் குன்றியதையும் இன்றைய இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. பயன்பாட்டிற்கு பாதகம் விளைவிக்கக்கூடிய வகையில் நீரின் வேதியியல், இயற்பியல், உயிரியல் நிலைகளில் ஏற்படும் மாற்றம் நீர் மாசுபாடு எனப்படுகிறது.

இவ்வாறு மாற்றமடைந்த நீர் மக்களின் பிற உயிர்களின் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றதாக மாறிப் போய்விடுகிறது. இவ்வாறு மனிதனால் மாசுப்படுத்தப்படும் நீர் நிலைகளை,

"தூண்டிலேந்திய சிறுவர்கள் திட்டுகளில்
அரும்பியிருக்கின்றனர்
கரையோரம் குப்பைகளைக்
கவிழ்த்துவிட்டுப் போகிறது
நகராட்சி வண்டி"

(தேவதை அல்ல பெண்கள்: ப.51)

என்று நன்னீர்நிலைகள் குப்பை கொட்டும். பள்ளங்களாகிப் போகும் அவலம் பதிவு செய்யப்படுகிறது. குப்பைகளால் நன்னீர் சாக்கடையாதலும், கொசுக்களுக்கு கூடார மாதலும் சுற்றுச்சூழல் பாதிப்பாகும்.

முடிவுரை

சங்கச் சூழலியல் சார்ந்த இயற்கையான வாழ்க்கைக்கும், இன்றைய தமிழகத்தின் நிலவெளிக்கும் இடையில் பெரிய இடைவெளி உள்ளது. இயற்கைக்கும், தமிழர்களுக்குமான உறவு பெரிதும் சிதலமாகியுள்ளது. மழைக் காடுகள், சோலைகள் அழிக்கப்பட்டது. கானகத்தில் வாழும் உயிரினங்கள் வேட்டையின் மூலம் கொல்லப்பட்டது எனச் சூழலின் பல்லுயிர்ப் பெருக்கம் நாசமாகிவிட்டது. தமிழகத்தில் இன்று செயல்படுத்தப்படுகிற கூடங்குளம் அணு உலைகள், மீத்தேன் திட்டம், நியுட்ரினோ, கார்பன் ஹைட்ரோ திட்டம் போன்ற பிரமாண்டமான அறிவியல் திட்டங்கள், கார்ப்பரேட்டுகளின் ஆதாயத்திற்காக அமல்படுத்தப்படுகின்றன. இன்னொரு புறம் சூழலியலின் சீர்கேட்டினால் நீரூற்றுகள் அற்றுப்போய் ஆறுகள் வறண்டு போய்விட்டன. புச்சிக்கொல்லி, நச்சு வேதியியல் உரங்கள் காரணமாக வளமான மருத நிலங்கள் மலடாகி விட்டன. பாலிதீன் பைகள், சாயக் கழிவுகள், ஆலைகளின் புகைகள், தோல் தொழிற்சாலைச் சுத்திகரிப்புக் கழிவுகள், வேதியியல் தொழிற்சாலைகளின் மாசுகள் எனத் தமிழகத்து நிலமும் காற்றும் சீரழித்து விட்டன. இன்னொரு புறம் பெரிய நகரங்களில் அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்க்கையே இயற்கையிலிருந்து முழுக்க அந்நியமாகியுள்ளது. சூழலியல் சார்ந்து வாழ்ந்த சங்கத் தமிழர்களின் ஐந்திணை நிலமானது இன்று கனவாக மாறியுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. புறநானூறு, கழக வெளியீடு, 1968 திருநெல்வேலி சைவ சித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம்.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், 1995, முல்லை நிலையம், சென்னை.
3. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, 1992, க்ரியா வெளியீடு, சென்னை.
4. கல்லால மரம், இரா.பச்சியப்பன், வைகறை பதிப்பகம், சென்னை.
5. தேவதையல்ல பெண்கள், யாழினி முனுசாமி, உயிர்மை பதிப்பகம், சென்னை.
6. சுற்றுச் சூழலியல் நோக்கில், சங்கத் தமிழகம், மகிழேந்தி, பார்க்கர் பதிப்பகம், சென்னை.